# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : 044-25358718, 9444058718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:115:2019 04.03.2019

அன்பார்ந்த தோழர்களே !

## பிராந்திய சிறப்புக்கூட்டம்

மாநாடுகளுக்கு இடையே, ஊழியர்களுக்கும் சங்கத்திற்குமான தொடர்பு என்பது சுற்றறிக்கைகள், தொலைபேசி உரையாடல்கள், நிர்வாகிகள் கிளைகளுக்குச் செல்லும்போது நடைபெறும் கூட்டங்கள் வாயிலாகவே நடைபெறுகிறது.

சமீபத்தில் சேர்ந்த தோழர்கள், பகுதிவாரியாக கூட்டங்கள் நடத்தினால், அதன் மூலம் ஊழியர்களின் உணர்வுகளை அறிந்துகொள்ளவும், சங்கத்தின் செயல்பாடுகளை உறுப்பினர்களுக்கு விளக்கவும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்ததன் அடிப்படையில், ஒவ்வொரு பிராந்தியத்திலும் இரண்டு, மூன்று கூட்டங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டு, அத்தகைய முதல் கூட்டம் ஜனவரி 6ஆம் நாள், வேலூரில் நடைபெற்றது. இரண்டாவது கூட்டம் ராஜபாளையத்தில் 20.01.2019 அன்று நடைபெற்றது. கோவை கிழக்குப் பிராந்திய சிறப்புக்கூட்டம் திருச்சியில் 27.01.2019 அன்று நடைபெற்றது. மதுரை கிழக்குப் பிராந்திய சிறப்புக்கூட்டம் தஞ்சையில் 03.03.2019 அன்று நடைபெற்றது. சேலம் பிராந்திய சிறப்புக்கூட்டம் கீழ்க்கண்டபடி நடைபெறவுள்ளது :

இடம் : **பாலகிருஷ்ணா சிற்றுண்டி சாலை**

**(புதிய பேருந்து நிலையம் எதிரில்),**சேலம்

நாள் : 10.03.2019 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : காலை 10 மணி

மதிய உணவு : மதியம் 1.30 மணி

சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவசியம் கலந்து கொண்டு, தங்கள் கருத்துக்களை தெரிவித்து, தலைவர்கள் கூறும் கருத்துக்களையும் கேட்டு, தேவையான விளக்கங்களையும் பெற்று இந்தக் கூட்டத்தை வெற்றி பெறச் செய்திட வேண்டுகிறோம்.

கூட்டம் காலை சரியாக 10 மணியளவில் துவங்க இருப்பதால், அனைத்து உறுப்பினர்களும், தவறாமல் குறித்த நேரத்திற்கு வந்து, கூட்டம் துவங்க உதவிட வேண்டுகிறோம். வெளியூரிலிருந்து வரும் தோழர்களுக்கு பேருந்துக் கட்டணம் வழங்கப்படும்.

மேலும் தகவல்கள் தேவைப்படும் தோழர்கள், கூட்டத்தின் அமைப்பாளர் தோழர். Com. M. Kalaimamani, செயலாளர் (அலைபேசி எண்: 9840735037, 9944180708) அவர்களைத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்